303

மாதர் போதினி

No. 259 ஆகஸ்டு 1919 No. 8

A GENERAL KNOWLEDGE OF THE GREAT EUROPEAN WAR

ஐரோப்பிய மகா யுத்த விளக்கம்

ஆஸ்திரியா தேசத்து இளவரசான பட்டமகிபனும் மகிஷியும் நாடுகளைச் சுற்றிப்பார்த்துவருகையில், செர்வியாதேசமாணாக்கர் பகையினால் அவர்களைக் கொன்றுவிட்டார்கள். இதினிமித்தம் ஆஸ்திரியா கோபாவேஷமாய் செர்வியாவிடம் பழிவாங்க எண்ணி பதிமூன்று நிபந்தனைகளுள்ள ஓர் பத்திரம் எழுதியனுப்பிற்று. இதற்கு செர்வியா பதில் கொடுக்குமுன்னதாக இவ்விஷயத்தில் ஜெர்மனிதேசம் தலையிட்டு, 'செர்வியா செய்த சதி லேசல்ல, இதற்குப் பழிவாங்க யுத்தஞ் செய்வதே சரி. இதோ நான் கடந்த 40 வருஷங்களாக யுத்தத்திற்கு வேண்டிய சகல ஆயத்தங்களுஞ் செய்துவந்திருக்கிறேன். வேண்டிய யுத்த புருஷரும், தளகர்த்தரும், குண்டுகளும், மருந்துகளும், புகைரதங்களும், ஆகாயவாகனங்களும் என்னிடத்திலுண்டு. நாம் எங்கு வேண்டுமானாலுஞ் செல்லலாம். நான் உனக்கு சகல உதவியுஞ் செய்கிறேன். அஞ்சாமல் செர்வியாவை எதிர்த்து யுத்தந்தொடங்கு' என்று கபடாலோசனை சொல்லி ஆஸ்திரியாவை ஏவிவிடவே, ஆஸ்திரியா செர்வியாமேல் போருக்குப் போனது. ருஷியர் செர்வியரைப்போல் ஸ்லாவ் ஜாதியைச் சேர்ந்தவரானதால் செர்வியருக்குத் துணையாக யுத்தத்திற்குப் புறப்பட்டனர். ருஷியரும் பிரான்சுக்காரரும் முன் செய்திருந்த உடன்படிக்கைப்படி ஒருவருக்கொருவர் உதவிசெய்வோமென்ற வாக்குப்பண்ணியிருந்ததால், பிரான்சுக்காரர் ருஷியருக்குதவியாய்ப் புறப்படவிடாமல் தடுத்து அவர்களோடு யுத்தஞ் செய்யும்படி ஜெர்மனி புறப்பட்டு பெல்ஜியம் தேசவழியாய்ப் போவது சுலபவழியாதலால் அத்தேச மார்க்கமாய்த் தன் சேனைகளை நடத்திச் சென்றது. பெல்ஜியம்

யுத்தத்தில் சம்பந்தப்படாத தனி நாடானதினல், ஜெர்மனி தன் தேசத்துக்குள் உத்தரவின்றி வருவதை நினைத்து அங்கலாய்த்து, தான் ஒரு சிறு தேசமாதலின் பிரமாண்டமான ஜெர்மனியை எதிர்ப்ப தெவ்வாறென்றஞ்சித் திகைத்திருக்கையில், இவ்விதமாய் ஜெர்மனி செய்யும் அடாத காரியத்தை இங்கிலாந்து தடுக்கமுயன்று, ஹேக் என்றவிடத்தில் நடந்த கான்வரன்ஸ் சபையில் ஐரோப்பாவின் முக்கிய தேசங்களெல்லாம் சேர்ந்து சம்மதித்துக் கையொப்பமிட்ட உடன்படிக்கைக்கு மாருய் இவ்வண்ணம் பெல்ஜியம் வழியாய் ஜெர்மனி செல்வது தகாதென்று எச்சரித்து நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் ஜெர்மனி தன் படையை பெல்ஜியத்திலிருந்து திரும் பிப்போகச் செய்யாவிடில், வாக்கு உண்மையைக் காப்பதற்காகவும், நீதிநியாயத்தை நிலைநிறுத்தும்படியாகவும், ஒடுக்கப்படும் பெல்ஜி யத்துக்கு ஒத்தாசை புரியும்படியாகவும் ஜெர்மனிமேல் யுத்தம் துவக்குவேன் என்க, ஜெர்மனி தான் செய்திருந்த வாக்கை மீறி, ஹேக் கான்வரன்ஸ் சபை உடன்படிக்கைப் பத்திரம் துடைத்து எறிந்துவிடும் காகிதம்போல் எண்ணமற்றதாகச் செய்து, தன் சேனை களைப் பெல்ஜியத்தினின்று திருப்பிக் கொண்டுபோகவில்லை. இதைக் கண்டு இங்கிலாந்து, ஜெர்மனியோடு, போராவலாலல்ல, நாடு நகரம் சம்பாதிக்கவல்ல, கீர்த்தி புகழ் வெற்றி பெறவல்ல, சத்தி யத்தையும் நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்தும்படியாகவும், ஒடுக்கப்படும் எளியருக்கு உதவியாகவும், உலக நன்மைக்காகவும், அதிக மனஸ்தாபத்தோடும் ஜெபத்தோடும் யுத்தத்தில் பிரவேசித்தது. இதுவே கடந்த மகா யுத்தத்தின் காரணமும் ஆரம்பமுமாம்.

துருக்கி பிரிட்டிஷ்காரரிடம் எத்தனையோ நன்மைகளையும் சலாக்கியங்களையும் பெற்றுவந்திருந்தும், சகலத்தையும் மறந்து நன்றி கெட்டதுரோகியாய் ஜெர்மனியைச் சேர்ந்துகொண்டது. பல் கேரியாவும் சமயத்துக் கேற்றூற்போல் ஜெர்மனியை அண்டிக் கொண்டது. ஆகவே ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, பல்கேரியா என்ற தேசங்கள் மத்திப தேசங்கள் Central Powers என்றழைக்கப் பட்டு எதிர்க் கட்சிக்காரராஞர்.

இத்தாலியாவும் ருமேனியாவும் போர்த்துக்கல்லும் பிரிட்டிஷ் காரரைச் சேர்ந்துகொண்டன. கிரேக் தேச ராணி ஜெர்மன் அரசனுன கைசருக்கு சகோதரியானதால் சிறிதுகாலமாய் கிரேக் தேசம் பிரிட்டிஷ்காரரைச் சேராமல் யோசித்துக்கொண்டிருந்தது. என்றாலும் கிரேக்கர் யாவரும் பிரிட்டிஷ்காரருக்கு அனுகூலமா யிருக்கத் தீர்மானித்திருந்ததால் அத்தேசத்தரசன் தேசம்விட்டு ஓடிப் போய்விட, கிரேக் தேசமும் பிரிட்டிஷ்காரரைச் சேர்ந்து போர்

புரிய உதவிசெய்தது. முன் பிரிட்டிஷ்காரரோடிருந்த ருஷியா மனம் மாறுபட்டுப் பிரிந்துபோய் ஜெர்மனியரைச் சேர்ந்து பின் அவர்களையும் விட்டுத் தனியே பிரிந்துபோயிற்று. இச்சமயத்தில் அமெரிக்கா ஏற்ற சமயத்தில் தகுந்த பேருதவி புரியும்படியாய் வந்து பிரிட்டிஷ்காரரைச் சேர்ந்தது. இதுவுமன்றி ஜப்பான், சீனு, நியு சிலாந்து தேசத்தவரும் பிரிட்டிஷ்காரருக்குப் பேருதவிசெய்து அவரோடு சேர்ந்துகொண்டார்கள். ஆகவே, **பிரிடடிஷ் ராஜ்யம், பிரான்ஸ், பெல்ஜியம், செர்வியா, ருமேனியா, இத்தாலியா, கிரீஸ், போர்த்துக்கல், ஜப்பான், சீனு, நியுசிலாந்து, அமெரிக்கா** முதலிய தேசத்தவர் Allies என்று சொல்லப்படும் ஐக்கியத்துணைச் சிநேகர் ஆனுர்.

மகாயுத்தம் 1914-ம் வருஷம் ஆகஸ்றுமாதம் 4-ம் தேதி முதல் 1918-ம் வருஷம் நவம்பர்மாதம் 10-ம் தேதி வரை மகா மும்முரமாய் எண்ணிறந்த உயிர்ச்சேதமும், பொருள் நஷ்டமும், கால வியர்த்தமும் விளைத்து வந்தது. இக்காலத்தில் ஜெர்மனியும் துருக்கியும் செய்த கொடுமைகளை எடுத்துரைப்பின் காலமும் இடமும் போதாது, அவற்றை விஸ்தரிக்கவும் முடியாது. அக்காட்சியைக் காணுதபடி கண்களை மூடி, அச்செய்தியைக் கேளாதபடி செவியை அடைத்துக் கொள்வது உசிதம்.

ஐரோப்பாவின் கிழக்குக்கரை நாடுகளிலும் மேற்குத்திசை நாடுகளிலும் மத்தியதரைக்கடலைச் சுற்றிலும் சூயஸ் கால்வாயண்டையிலும், கிழக்கு ஆப்பிரிக்கா தென் ஆப்பிரிக்காவிலும், மெசொப்பொத்தாமியாவிலும் அங்கங்கு பற்பல விடங்களிலும் யுத்தம் மும்முரமாய் நடந்தது. இவைகளின் விபரத்தைத் தினசரிப் பத்திரிகைகளில் வாசித்து வந்திருக்கிறோம். இவற்றின் விபரமே ஓர் சரிததிரப் புஸ்தகமாகும். உலகம் முழுவதுக்கும் ஆபத்து வந்ததுபோலிருந்தது.

ஜெர்மனி நடப்பித்த பாழ்க்கடிப்புகளைக் கண்டு கேள்வியுற்ற சிலர், இவ்வளவு காலம் யுத்தம் நடந்தும் இன்னும் ஜெர்மனிக்கு வேண்டிய பலமிருக்கிறதே, ஜெர்மனி மற்ற தேசங்களுக்குள் இத்தனை தூரஞ் சென்றிருந்தும், பிரிட்டிஷ்காரரும் அவரைச் சேர்ந்தவரும் ஒரு அங்குலமாகிலும் ஜெர்மானிய தேசத்துட் செல்லவில்லையே, ஜெர்மனிதான் ஜெயம் பெறும்போலிருக்கிறது என்ற பேச்சைப் பரவச் செய்தார்கள். கொடும் ஆபத்திலும் கடவுள் மேலுள்ள நம்பிக்கையை இழந்துபோகாமல் ‘நீதி ஜனத்தை உயர்த்தும்’ என்ற வசனத்தை நம்பியிருந்தவரோ, கடைசிமட்டும் பார்ப்போம், கடவுள் மாருதவர், அவர் நீதியின் சூரியன், நீதியை நிலைநிறுத்துவார், அவர் சத்தியமுள்ளவர், சத்தியம் தாழவிடார், சத்தி

யத்தை உறுதிப்படுத்தி ரூப்ப்பார், இந்த யுத்த காலத்தில் நாம் நமது குறைவுகளையும் பாவங்களையும் நினைந்து மனஸ்தாபப்பட்டு அவ ரண்டை திரும்பி அவரேயே நோக்கிப் பொறுமையாய்க் காத்திருப் போம், யுத்தம் கர்த்தருடையது, இரட்சிக்கிறதற்கு மனுஷீக பெலம் விருதா, மனுஷ பெலம் அடங்கும் கடவுள் நித்தியமானவர், பிரிட்டிஷ்காரர் நீதியையும் சத்தியத்தையும் நிலைநிறுத்தி ஒடுக்கப் படும் சிற்றரசருக்குதவியாய்ப் போரில் பிரவேசித்ததால் இறுதியில் ஜெயங்கிடைப்பது நிச்சயமென்றார்கள். அவ்வண்ணமே சத்திய முள்ள நீதியின் தேவன் பிரிட்டிஷ்காரருக்கும் அவரது ஐக்கிய சிநேகத்துணைவருக்கும் (Allies) தேவதாசர்கள் கொண்டிருந்த நம் பிக்கைக்கு மேலாய் திடீரென்று 1918-ம் வருஷம் நவம்பர்மாதம் 10-ம் தேதி யுத்தம் ஓயச்செய்து வெற்றிகொடுத்தார்.

(Allies) ஐக்கியசிநேகத்துணைவர் ஒன்றுசேர்ந்து சமாதான உடன் படிக்கைக்கு வேண்டிய நிபந்தனைகளை ஏற்படுத்தி கையொப்பமிடும் படி கேட்டார்கள். ஜெர்மனி கடந்த ஜூன் மாதம் வரை கடத்திக் கொண்டே வந்து கடைசியில் இவ்வருஷம் ஜூன் 28-ம் தேதி 4½ மணிக்கு சமாதான உடன்படிக்கையில் கூறியிருக்கும் நிபந் தனைகளுக் குடன்படுகிறேன் என்று கையெழுத்துப் போட்டது.

இந்த சமாதானத்தால் இப்போது தேசங்களுக்கெல்லாம் மகிழ்ச் சியும் அமைதலும் ஆறுதலு முண்டாயிருக்கிறது. இந்த சுபதினத் தைக் கொண்டாடும்படி ஜூலை மாதம் 2-ம் தேதி விடுமுறை நாளா யிருந்தது. மறுபடியும் 19-ம் தேதி சனிக்கிழமை பெரிய கொண் டாட்டமிருந்தது. பாடசாலைச் சிறுவருக்கு விளையாட்டுகளும் சிற் றுண்டியும் ஏற்பாடாகியிருந்தது.

சகலத்துக்கும் மேலானவராய் பூமி முழுவதுக்கும் ஏக சக்ராதி பதியாய், ஒருவராய், ஆதியந்தமில்லாதவராய், எங்கும் வியாபித்து சகலத்தையும் அறிந்து சர்வவல்லமையும் சர்வ ஞானமும் சர்வ அதிகாரமுமுள்ள நீதி ரூபமும் சத்திய ரூபமுமாயுள்ள மெய்க்கட வுளை நாம் யாவரும் ஸ்தோத்திரித்துப் பணிவோமாக. நாமும் அவ ரைப்போலவே சத்தியமும் நீதியும் சகல சுகுணமுமுள்ளவராய் நடக்கக்கூடுமென்பதைக் காட்ட தமது ஒரே பேறான குமாரனான இயேசுகிறிஸ்துவை இவ்வுலகில் அனுப்பி நமது ரூபமாய் இவ்வுல கில் மாசற்ற பரிசுத்த ஜீவியஞ்செய்து மாதிரி காட்டி தம்மையே பலி யாய் ஒப்புக்கொடுத்து நமக்கு நீதி சம்பாதித்தார். இந்த இயேசுபக வானை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அவரது பாடு மரண புண்ணியத் தால் சத்தியமும் நீதியும் நித்திய ஜீவனும் இலவசமாய்க் கிடைக்கும்.

307

A SONG OF THE ALLIES

யுத்தமுடிவில் ஐக்கியசிநேகத்துணைவர் பாடல்

(1) பாருங்கள் சிநேகர் கொடி தோழிகாள்!
பாங்காய் அதன் வர்ணங்களை நோக்குங்கள்!
நேர் உண்மை நிலைநாட்டவும்,
மெய்ச் சமாதானம் ஓங்கவும்,
போர்புரிந்து வெற்றி பெற்ரோம் பாருங்கள்.
ஏகோபித்துக் கூடுங்கள்!
ஆர்ப்பரித்துப் பாடுங்கள்!
தேவநாமம் மகிமைப்பட,
ராஜ்யங்கள் அமர்ந்திருக்க.

(2) ஜெர்மனியே இனி ஓர்போதும் எதிர்க்காதே;
மேலே தேவனுண் டென்பதை மறவாதே;
நீதி நிற்கும், நியாயம் ஓங்கும்;
சத்யம் மாருது நிலைக்கும்;
வீணை மண் பாராக்ரமம் நிலையாதே.

PEACE

சமாதானம்

சமாதானத்தைப்போல் உலகிலுள்ளவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது வெருென்றுமில்லை. சமாதானம் அநேகவிதமான கவலைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள், வியாகுலங்கள், தரித்திரங்கள் எல்லாவற்றினின்றும் விடுதலை செய்கிற ஒரு காரியமாயிருக்கிறதென்று தற்காலம் எல்லாரும் அறிவார்கள். ஏனெனில், ஐரோப்பாக் கண்டத்தில் நாலு வருஷங்களுக்கு மேலாக எவ்வளவு பயங்கரமான யுத்தம் நடந்தது. உலகமுண்டானது மட்டும் நாம் அறிந்த வண்ணம் இதைப்போல் பயங்கரமும் அதிர்ச்சியைக் கொடுக்கிறதுமான யுத்தம் எப்போதும் நடந்ததில்லை. பயங்கரமான யுத்த ஆயுதங்கள் புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டன. அநேக முடி மன்னர்கள் சிங்காசனம் இழந்துபோனுர்கள். உயிர் இழந்தார்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஆண்களிலும் பெண்களிலும் இந்த யுத்தத்திஞல் மரித்துப்போனுர்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான மனிதர் கண்கள், கைகள், கால்கள், மற்றும் அங்கங்கள் இழந்து

அங்கவீனப்பட்டுப் போனுர். அநேகமாயிரமான பெண்கள் விதவைகளானுர்கள். எத்தனையோ பிள்ளைகள் பெற்ருரை இழந்து அநாதிகளானுர்கள். எத்தனையோ பேர் வீடுவாசல், நிலங்கரைகளை இழந்து திக்கற்றவர்களானுர்கள். இவ்வளவு ஏராளமான நிர்ப்பாக்கியங்களுக்குக் காரணம் இந்த யுத்தமே.

மனுஷர்கள் திடுக்கிடத்தக்கதாக ஆகாயத்திலே யுத்தம், சமுத்திரத்து ஆழங்களுக்குள் யுத்தம், தரையிலே யுத்தம் நடந்து தத்தளிக்கப் பண்ணிற்று. கருணை நிறைந்த நம் ராஜாவும், அவரோடு ஐக்கியப்பட்டிருந்த மற்ற தேசத்தவர்களும் சத்தியத்தை நிலைநிறுத்தும்படியாகவும், நீதியை ஸ்தாபிக்கும்படியாகவும்,சிற்றரசு தேசங்களை ஆதரிக்கும்படியாகவும், தங்களுடைய சகலவிதமான மனுஷர்களையும் பொருள்களையும், செலவு செய்து சத்துராதியாயிருந்த ஜெர்மானிய தேசத்தோடும் அதனைச் சேர்ந்தவைகளோடும் கர்த்தருக்குள் வெகு திடநம்பிக்கையோடு சமர்புரிந்து யுத்தத்தை சமாதானத்துக்குக் கொண்டுவந்து விட்டார்கள். நமது பிரிட்டிவ்ஷ் ராஜாங்கத்தாரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் மகிமையான ஜெயம் பெற்ருர்கள். ஆகையால் ஜெர்மானியர்பேரிலும் அவர்களைச் சேர்ந்தவர்கள் பேரிலும், அவர்கள் நிறைவேற்றக்கூடியதும், இனிமேலும் துராகிருதமான யுத்தத்தைத் தொடங்காதபடிக்கும், நீதி நிறைந்த தான நிபந்தனைகளைப்போட்டு ஞானமாய் அவர்களோடு பேசி சமாதான உடன்படிக்கையில் ஜூன் மாதம் 28-ம் தேதி 4½-மணிக்கு கையொப்பம் போடும்படி செய்வித்தார்கள். இதை நினைவுகூரும்படிதான் பிரிட்டிவ்ஷ் ராஜ்யம் எங்கும் சந்தோஷித்து களிகூர்ந்து நித்தியானந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் சமர்ப்பித்து ஜூலை மாதம் 19-ம் தேதியில் கொண்டாடும்படி கவர்ண்மென்ருர் தீர்மானம்செய்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார்கள். அந்த நாளில் ஏழைகளைச் சந்தோஷிப்பிக்கும்படி தகுந்த விருந்துகளும், சிறுபிள்ளைகளுக்கு சிற்றுண்டி பதார்த்தங்களும் அளிக்கப்பட்டன. நிச்சயமாகவே அந்த நாள் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும், ஏழைகளுக்கும் ஐசுவரியவான்களுக்கும் சந்தோஷ தினந்தான். இனிமேல் உணவு பொருட்கள் துணிகள், மற்றும் அநேக சாமான்கள் படிப்படியாக மலியும் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த யுத்தம் தொடங்கி இரண்டு மூன்று வருஷங்களாய் நமது பிரிட்டிவ்ஷ் ராஜாங்கத்தாரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தோல்வியடைந்து போவார்களென்று சொல்லத்தக்கதாக ஜெர்மானியரும் அவர்களைச் சேர்ந்த தேசத்தவர்களும் மகா மும்முரமாய் யுத்தம் செய்து ஐரோப்பா கண்டத்திலே அநேகவிதமான பாழ்க்கடிப்புகளை

உண்டாக்கினார்கள், ஐரோப்பாக் கண்டத்தில் உண்டான யுத்தத்தினால் உலகமெங்குமுள்ள ஜனங்களுக்கு அநேகவிதமான சங்கடங்கள் நேர்ந்தன, இப்போது சமாதானமுண்டாகிவிட்டதென்றால் எவ்வளவு சந்தோஷம் உலகத்துக்கு இருக்கவேண்டுமென்று யார்தான் சொல்லமாட்டார். நீதியின் தேவனாகிய கிறிஸ்து வானத்திலிருந்து மனுஷருடைய நோக்கங்களையும் துர்க்கிரியைகளையும் கண்ணுற்று பார்க்கும் வேளை வந்தது. நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் நன்மைக்காக பாடுபடுகிறவர்களென்று பார்த்தார், சமாதானப் பிரபுவாகிய கிறிஸ்து வள்ளல் வெற்றியை நமது கருணை நிறைந்த ராஜாங்கத்தார் பக்கமாய்த் திருப்பினார், அவருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக. நீதி எந்த ஜாதிக்கும் உயர்வு என்பது தெளிவாய்க் காணப்படுகிறது. இப்பொழுது உண்டாயிருக்கிற சமாதானம் நீடித்திருக்கும்படி நாமெல்லாரும் தேவனை நோக்கிப் பிரார்த்திக்கவேண்டியது நமது கடமை.

உலகத்திலுண்டான மனுடர்கள் ஒவ்வொருவருக்கும் பொதுவான ஒரு சத்துராதியுண்டு. அவன்தான் சாத்தான். ஒவ்வொருவருக்கும் அவன்மேல் ஜெயம் பெற்றுக்கொள்ளும்படி சக்தியும் பெலனும் கொடுக்க சர்வத்துக்கும் மேலான சத்துவமுள்ள ஒரு சமாதானப் பிரபுவுமுண்டு. அவர்தான் இயேசுகிறிஸ்து. அவர் கட்டளைப் பிரகாரம் நடக்கிற ஆணுக்கும் பெண்ணுக்கும் உதவிபுரிய அவர் எப்போதும் ஆயத்தமுள்ளவராயிருக்கிறார் என்கிற சத்தியம் எவ்வளவு சந்தோஷத்தையும் திடநம்பிக்கையையும் கொடுக்கிறதாயிருக்கிறது. பாவத்துக்கு அதிபதியாகிய சாத்தானை நமது அன்றாடக ஜீவியத்திலே இயேசுவின் கிருபையினால் ஜெயித்து பாவத்தைக் கட்டோடே ஒழித்து ஜீவாதிபதியாகிய கிறிஸ்துவோடே என்றென்றைக்கும் சமாதான உடன்படிக்கை செய்யவேண்டியது நமது கடமையாய் இருக்கிறது.

V. D. K.

SATAN'S DEFEAT

அவமானப்பட்ட சாத்தான்.

ஒரு தரம் சாத்தான் லூத்தரை அணுகி, 'மார்டின் லூத்தரே! நீர் ஒரு பெரிய பாவி. ஆதலால் நீர் அழிக்கப்படவேண்டும்' என்று சொன்னான்.

உடனே லூத்தர் ஆச்சரியமடைந்தவராகி, 'நிறுத்து! நிறுத்து! தனித்தனியே ஒவ்வொரு வாக்கியமாகச் சொல். அது உனக்கடுத்த

வேலையாயிராவிடினும், நான் ஒரு பெரிய பாவி என்று நீ சொல்வது மெய்யே. நானும் அதை அறிக்கை யிடுகின்றேன். நீ மொழிந்த அடுத்த வாக்கியம் என்ன?' என்று கேட்டார்.

'நீர் தண்டிக்கப்படவேண்டியது. அதாவது நீர் நிர்மூலமாக்கப்படவேண்டியது' என்று சாத்தான் கூறவே, லுத்தர் 'உன்னுடைய நியாயம் சரியல்ல. நான் ஒரு பெரிய பாவி என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், பாவிகளை இரக்ஷிக்க இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார் என்று எழுதியிருக்கிறது. நான் பாவியாகையால் நானும் இரக்ஷிக்கப்படுவேன். நீ உன் வழியே போ' என்றார். நம்மில் ஒவ்வொருவரும் இப்படிச் சொல்லக்கூடியவர்களாய் இருக்கிறோமோ?

'உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்.' பேதுரு 5 : 8.

'இழந்துபோனதைத் தேடவும் இரக்ஷிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்.' லூக்கா 19 : 10.

CHILDREN'S PAGE—பாலர் பக்கம்

A FREE GIFT

இலவசமான ஈவு

துரை ஒருவர் சந்தையிலிருந்து நேர்த்தியான பழவகைகள் நிறைந்த கூடை ஒன்று எடுத்துக்கொண்டு சந்தையினின்று வெளி வரவே, ஒரு ஸ்திரீ அந்த அருமையான பழங்களைக் கண்டு தான் அவைகளைப்போலொத்த பழங்களை வாங்கியிருந்தால் தன் நண்பருக்குக் கொடுக்கலாமே என்று பலவாறாக அப்பழங்களின் இனிமையையும் மேன்மையையும் கொண்டாடினாள்.

துரை இவள் விருப்பத்தைக் கண்டு அப்பழங்களைத் தாம் அவளுக்குக் கொடுத்துவிடுவதாகச் சொல்ல, அந்த ஸ்திரீக்கு அவைகளை அவரிடமிருந்து இனாமாகப் பெற்றுக்கொள்ள இஷ்டப்படாததலால் அவைகளின் கிரயம் என்னவென்று வினவினாள். துரைக்கு அவைகளைக் கொடுத்துவிட விருப்பமிருந்தும், அவைகளை விற்க அவர் விரும்பவில்லை.

அந்த ஸ்திரீக்கு பழங்களை விலை கொடுத்து வாங்க இஷ்டமிருந்தது. துரைக்கு பணத்திற்கு விற்க இஷ்டமில்லை. இப்படியாக

வெகுநேரம் தகரார் ஆயிற்று. கடைசியாக துரை, 'அம்மா, இப்பழங்கள் உங்களுக்கு வேண்டுமானல் இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது நான் உமக்கு அதைக் கொடுக்கப்போகிறதே யில்லை' என்றார். அந்த அம்மாளும் துரைக்கு தன் நன்றியறிதலைத் தெரிவித்து, அவரிடமிருந்து அப்பழங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொண்டாள்.

இந்த ஸ்திரீயைப்போலவே நாமும் நமது இரட்சிப்புக்கு ஏதோ பற்பல காரியங்களைச் செய்யலாம் என்று யோசிக்கிறோம். ஒரு சத்திரத்தைக் கட்டுவதினால், ஏழைகளுக்கு அன்ன வஸ்திரம் கொடுப்பதினால், புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வதினால் நாம் இரட்சிக்கப்பட்டவர்களாவோம். சொற்கலோகத்திற்குப் பாத்திரவான்களாவோம் என்று எண்ணுகிறோம். ஆனல் ஆண்டவர் என்ன சொல்லுகிறார்! அந்த துரையைப்போலவே, 'நீ என்னிடமிருந்து இலவசமாய்ப் பெற்றுக்கொள். அல்லது நான் உனக்குக் கொடுக்கப்போகிறதேயில்லை' என்கிறார். நாம் என்ன செய்வோம்? அந்த ஸ்திரீயைப்போலவே, நாமும் மகா இரட்சிப்பை இலவசமாய்ப் பெற்று கடவுளுக்கு நன்றியறிதலுள்ளவர்களாய் இருப்போமாக. இந்த இரட்சிப்புக்கு நாம் எவ்வளவு பெருந்தொகையை கூடுமானல் உலகமுழுவதையுங் கொடுத்தாலும் ஈடாகாது.

TASTING THE LOVE OF GOD

தேவ அன்பை ருசித்தல்

ஸ்கொத்லாந்து தேசத்தில் ஒரு குருவைப் பார்க்கச் சிநேகிதர் ஒருவர் வந்திருந்தார். சிநேகிதரும் குருவுமாக வியாதியஸ்தன் ஒருவனைப் பார்க்கப்போயினர். வியாதியஸ்தனை அச்சிநேகிதர் இவர் எவ்வளவு காலம் வியாதியாயிருக்கிறார் என்று வினவ, நோயாளி தாம் 40 வருஷமாக படுக்கையிலிருப்பதாக வெகு அமரிக்கையாக உத்தரவளித்தார். இதைக்கேட்ட சிநேகிதர் வெகுவாய் ஆச்சரியமடைந்து, 'என்ன ஐயா! நீங்கள் 40 வருஷமாக நோயாயிருந்தும் உங்கள் முகம் இவ்வளவு மலர்ச்சியாயிருக்கிறதே! சாத்தான் உம்மைச் சோதிக்கிறதில்லையோ?' என்று கேட்டார். அந்த வியாதியஸ்தர், 'ஐயா! சாத்தான் யாரைத்தான் சும்மா விட்டுவிடுவான். எனக்கு நடுமுதுகில் ஓர் பலமான வலியுண்டு. நான் ஒரேபக்கமாகத்தான் படுத்திருக்கவேண்டியிருக்கிறது. இன்னொரு பக்கம் அசைய முடியவில்லை. அவ்வலி உண்டாகையில் சாத்தான் என்னிடம் வந்து, 'என்ன நீ இயற்கைப்பொருட்களை அநுபவியா

மல் இப்படி படுத்திருக்கிறாயே! இதுதானா தேவ அன்பு' என்று பலவாறாக பற்பல சொற்களால் என்னைச் சோதிக்கிறான். நான் உடனே அவனுக்குக் கல்வாரி மலையிலுள்ள சிலுவைக் காக்ஷியைக் காண்பித்து 'இதோ எனக்காக சிலுவையின் மத்தியில் தொங்கும் இவரல்லோ என் அன்புநாயகர். இப்பேர்ப்பட்டவர் என்னை நேசிக்க வில்லை என்று நீ எவ்வாறு சொல்லலாம்?' என்றால் சாத்தான் ஓடிப்போகிறான். எனக்கு சோதனை உண்டாகும்போதெல்லாம் கிறிஸ்துவின் பாடுகளைக்கொண்டே சோதனையை ஜெயிக்கிறேன்' என்று சொல்லி முடித்தார்.

ஆம், பிரியமானவர்களே! சாத்தான் நம்மிடமும் வந்து 'நாம் கிறிஸ்துவண்டை அணுகக்கூடாத அத்தனை பெரிய பாவிகள். நமக்கு இரட்சிப்பு கிடைக்க வழியில்லை' என்று சொல்லி சோதிக்கையில், நாம் அவருடைய் பாடுகளைத் தியானித்து அவைகளைக் கொண்டு சோதனையை ஜெயிப்போமாக.

A SINNER'S RANSOM

பாவியின் மீட்பு

ஓர் பள்ளிக்கூடத்தில் சிறு பையன்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். கண்ணாடி சாமான்கள் வைத்திருக்கும் அறையில் பந்து ஆடலாகாது என்பது தலைமை உபாத்தியாயரின் கண்டிப்பான கட்டளையாயிருந்தும், ஒரு பையன் உபாத்தியாயரின் கட்டளையை மீறி, அங்கே பந்தாடி, கண்ணாடி சாமான்களில் ஒன்றை உடைத்துப் போட்டான். பையன் என்னசெய்வான்? கண்ணீர் மாலைமாலையாய் சொரிகிறான். எத்தனை குடம் கண்ணீர் சொரிந்தாலும் அந்த சாமானைப் பொருத்திவைக்கக் கூடுமோ?

ஆம் சகோதரரே! நாமும் இந்தக் கீழ்ப்படியாத பையனைப் போல் நமது பரம உபாத்தியாயரின் கட்டளையை மீறினவர்களாகி, அவனைப்போலவே சஞ்சலத்துக்குள்ளவர்களாகி, கண்ணீர் விடுகிறோம். பயன் என்ன?

இந்தப் பையன் பிறகு என்ன செய்கிறான்? உட்கார்ந்து உடைந்துபோன துண்டுகளையெல்லாம் சேர்த்து பொருத்திவைக்கப் பார்க்கிறான். அவைகள் பொருந்திக்கொண்டதா? இந்தப் பையன் வீணாக தன்னுடைய நிர்ப்பந்தத்தை முன்னிட்டு இப்படி பிரயாசப் படுகிறான். பயன் ஒன்றையும் காணோம். நாமும் இந்தப் பையனைப்போலவே புத்திகெட்டவர்களாயிருக்கிறோம். பல கிரியை

களைச் செய்து புண்ணியம் சம்பாதிக்கலாம் என்று எண்ணுகிறோம். ஏழைகளுக்கு அன்னவஸ்திரம் கொடுத்தோ, சத்திரம் கட்டியோ, கோவிலுக்குப் போயோ, நாம் உடைத்த கண்ணாடியைச் சரிப்படுத்தலாம் என்று நினைக்கிறோம். இந்த நற்கிரியைகள் எல்லாம் அந்தப் பையன் செய்த வேலைகள்போலவே இருக்கின்றன.

'நான் செய்த புண்ணியங்களை—பார்த்தால் அது செல்லாது,
என் சுயமாய்த் துர்க்கிரியை—ஒழிய நன்றிராது.
மகா திகில் எடுத்தது ;—நான் செத்து நரகத்துக்கு
தள்ளுண்பே னென்று தீர்த்தேன்.'

செய்யவேண்டிய தென்ன? மேற்படி சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகளெல்லாம், பணம்சேர்த்து ஒரு புதிய கண்ணாடி சாமான் வாங்கி உபாத்தியாயரிடம் கொடுத்தனர். நமது இரக்ஷிப்புக்கு அடுத்த விஷயமும் இதே மாதிரியாகத்தான் இருக்கிறது. பாவமறியாத இயேசு அக்கிரமக்காரராகிய நமக்குப் பாவமானார். நமது பாவங்களை முற்றிலும் மறந்து தம்மையே நமது ஸ்தானத்தில் வைத்து தமது இரத்தத்தைச் சிந்தினதால் இரக்ஷிப்பைச் சம்பாதித்தார். நாம் நமது பாவங்களையல்ல, அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும்.

'ரட்சிப்பு சுத்ததயவால்—உண்டான தேவதத்தம்,
அது நாம் செய்த தர்மத்தால்—வருவது அவத்தம்.
பூலோகத்தின் கடன்களை—செலுத்தித் தீர்த்த இயேசுவை
அண்ணாந்து பார்க்க வேணும்.'

பையன்கள் இவ்வாறாக பணம் சேர்த்து கொடுக்கவேண்டியதின் காரணமென்ன? பையன் தானே பணம் சம்பாதித்து சாமான் வாங்கக்கூடிய நிலைமையில்லாதிருந்ததினாலும், அந்தப் பையன் மேலுள்ள சிநேகத்தினாலுமே? இந்தக் காரணமே நமது அருமை இரக்ஷகரையும் தமது விலையுயர்ந்த இரத்தத்தை நமக்குச் சிந்த ஏவிற்று.

'ஆம், என் பிதாவே, படுவேன்,—நான் நல்லமனதாக
எவ்வாதைக்குங் கீழாகிறேன்—என்றார் உத்தாரமாக.
ஆ நேசத்தின் அதிசயம்—இத்தன்மையாக உலகம் நேசிக்கப்பட்டிருக்கும்
சிநேகங் தேவமைந்தனை—பொல்லாதவர்கள் சாபத்தை
சுமப்பதற் கிழுக்கும்.'

மேற்படி பையன் சாமானை உடைத்த அன்று சாயந்திரமே, பள்ளிக்கூடத்தில் ஓர் விளையாட்டு இருந்தது. பையன் விளையாட மனமில்லாதிருந்தும் அவனுடைய சிநேகிதர் கூடி அவனை விளையாடும்படி சொல்லி சந்தோஷிப்பித்தனர். இப்படியாக நாமும் நம்

முடைய அபாத்திரத்தன்மையையும், பாவக்குற்றத்தையும் உணர வேண்டியவர்களா யிருக்கிறோம்.

'நிர்ப்பந்தமான பாவியான—நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலங்கான—பயமாய் வாறேன், கர்த்தரே.
இரங்குமேன், இரங்குமேன்—என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.'

தன் அபாத்திரத் தன்மையை உணர்ந்த பையன் இரவு படுக்கைக்குப் போகுமுன் தன் நன்றியைக் காட்ட தன் சிநேகிதருக்கு ஓர் கடிதம் எழுதி அனுப்பி சென்றான். நமது நிர்ப்பந்த நிலைமையையும், தேவனது அளவற்ற கிருபையையும் உணர்ந்தறிகிற நாம் அவருக்கு நன்றியறிதலைக் காட்ட நாம் என்ன செய்கிறோம்? பொன்னும் வெள்ளியும் அவருக்குத் தேவையில்லை. நமது ஊழியமே அவருக்குத் தேவை. அதை நாம் காலமிருக்கக் கொள்ளவே, வேலை செய்யமுடியாத இராக்காலம் வரும், செய்ய ஆயத்தமாயிருக்கிறோமா?

'என் நெஞ்சை, சுவாமி, உமக்கே—ஈவாய்ப் படைக்கிறேன்
நீர் இந்தக் காணிக்கையையே—கேட்டீர் என்றறிவேன்.
'என் முழு நெஞ்சையும் அன்பாய்—நீர், சுவாமி, என்றைக்கும்
அகமும் ஆலயமுமாய்—படைத்துக்கொண்டிரும்.'

நமது ஜீவகால முழுதும் நன்றிசெலுத்துகிறவர்களாய்ப் பிழைக்க சித்தங்கொண்டிருக்கிறோமா?

'என் நாவு பேசும் நாள்மட்டாக—என் நெஞ்சசையும்மட்டுக்கும்
நான் உமதன்பைப் பூரிப்பாக—இஸ்தோத்திரிப்பேன் நித்தமும்
என் வாய் ஓய்ந்தாலும், ஓய்ந்திரேன்;—என் உள்ளத்தாலே போற்றுவேன்.'

Lydia Vedanayagam.

CHRIST'S ASCENSION

கிறிஸ்து பரமேறுங் காட்சி

லூக்கா 24 : 51

அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களைவிட்டுப் பிரிந்து,
பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து உலக இரட்சகராக பரலோகத்தைவிட்டு இப்பூமண்டல மிறங்கி மானிடவதாரம் பூண்டது

ஒரு அதிசயம் ; அவர் ஒருக்காலும் ஒரு மனுஷனும் பேசாத சத்தியங்களை மொழிந்தது இன்னோர் அதிசயம் ; அவர் உலகமுண்டானது முதல் யாதாமொருவர் செய்யாத பிரமிக்கத்தக்கதான அதிசயமான அற்புதங்களை நடப்பித்து தம்மை மனுஷருக்கு வெளிப்படுத்தினது இன்னும் அதிசயம் ; அவர் பூலோகத்தின் மனுப்புத்திரருக்கு இரட்சணியங் கிடைக்கும்படி தம்மைப் பாவ மனுஷர் கைகளில் ஒப்புவித்ததும் அதிசயம் ; அவர் தம்முடைய பரிசுத்த சரீரத்தை மனுக்குலத்தின் ஈடேற்றத்திற்கென்று பலியாக ஒப்புக்கொடுக்கச் சித்தங்கொண்டதும் பெரிய அதிசயம் ; அவர் தம் மார்க்கத்துக்கு உயிர் கொடுக்கும்படிக்கும், இப்பூமியில் உதித்த மனுக்கோடிகளுக்கெல்லாம் ஜீவன் கொடுக்கும்படிக்கும் மரணத்தையும், மரணத்துக்கதிகாரியாகிய சாத்தானையும் ஜெயித்தவராய் உயிரோடெழுந்தது சிறந்த அதிசயம் ; இவையெல்லாவற்றினாலும் மனுஷர்களுக்குக் காட்டவேண்டிய காட்சியெல்லாம் காட்டி, போதிக்கவேண்டிய போதனைகளெல்லாம் போதித்தபின், மகத்துவமாய், மாட்சிமையாய், சர்வ வல்லவராய், சுமார் பதினொரு சீஷர்களையுஞ் சேர்த்து ஐந்நூறுபேருக் கதிகமான திருத்தொண்டர்கள் பார்த்து நிற்க மேகவானம் சென்று தம்மிருப்பிடமாகிய பிதாவின் சந்நிதானம் எடுத்துக்கொள்ளப்பட்டது எப்போதும் இப்போதும் யாரும் பிரமிக்கத்தக்கதும், பக்தருக்கு விசுவாசத்தை ஊன்றக் கட்டத்தக்கதுமான காட்சி அதிசயத்திலெல்லாம் பேர் அதிசயம்.

பரமேறுங் காட்சியில் நாம் அறியவேண்டிய மூன்று காரியங்கள் உண்டு : பரமேறின விதம், போன இடம், வேலை.

முதலாவது. பரமேறின விதம். சங்கீதக்காரன் 104-ம் சங்கீதம் 3-ம் வசனத்தில், மேகங்களைத் தமது இரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின்மேல் செல்லுகிறார் என்ற சத்தியம், சடப்பொருளான மனுஷருக்கு பகிரங்கமாய்க் காட்டப்பட்டது, கிறிஸ்து பரமேறின சமயத்தில்தான். பக்திக்கும் முத்திக்கும் திட்டமான சம்பவமும் காட்சியும் அவசியமாயிருக்கிறது. இயேசுவானவர் தம் சீஷர்களை பெத்தானியாவிலுள்ள ஒலிவ மலைக்கு அழைத்துக்கொண்டுபோய் கடைசியாக நாம் சொல்லவேண்டிய போதனைகளையெல்லாம் சொல்லி அவர்களிடத்தில் வழிவிட்டனுப்பி ஆசீர்வதிக்கையில் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது மேகங்களின் மேல் ஏறி வானலோகம் சென்றார். அவர் வழிவிட்டனுப்புகையில் அவரைப் பணிந்துகொண்டார்கள். இப்பொழுது சீஷர்களுக்கு அதிகச் சந்தோஷமும் திருப்திகரமுமுண்டாகி, அவர் வானத்தில் எழுந்தருளிப்போன விதத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்

டிருந்தார்கள். அப்பொழுது இரண்டு தூதர்கள் வெண் வஸ்திரம் தரித்தவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டு, இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். இயேசுவானவருடைய பிறப்பிலே வானத்தின் தூதன் மேய்ப்பருக்குக் காணப்பட்டு, 'பயப்படாதிருங்கள், இதோ! எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்' என்று பிரசங்கித்தான். அவரது மரணத்துக்கு முன் கஸ்தியடைந்திருக்கும் சமயத்தில் கெத்செமனே என்ற தோட்டத்தில் ஒரு தூதன் தோன்றி பரலோக காரியங்களை அவரோடு சம்பாஷித்து அவரைத் தேற்றினான். அவரது உயிர்த்தெழுதலில் இரண்டு தூதர்கள் சமாதியில் ஸ்திரீகளுக்கு நல்ல செய்தி கூறி உயிர்த்தெழுதலைப்பற்றிப் பிரசங்கித்தார்கள். பரமேறுதலிலும் இரண்டு தூதர்கள் சீஷர்கள் பக்கத்தில் நின்று அவர்களைத் தேற்றிப் பின் சம்பவிக்கப்போகிற கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் அறிவித்தார்கள். கிறிஸ்துவின் பரமேறுதல் நமக்கு எவ்வளவு சந்தோஷத்தையும் திடநம்பிக்கையையும் கொடுக்கிறதாயிருக்கிறது.

இரண்டாவது. போன இடம். கிறிஸ்து உயிர்த்தெழுந்தவுடன் தமது சீஷர்களுக்கும், மற்றவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் பற்பல இடங்களில் பலவிதமாய் தம்மைக் காட்டி, தம்முடைய சரீரத்தின் தழும்புகளையும் தடவிப்பார்க்கும்படி செய்து, அவர்களோடு புசித்து, அவர்கள் மனதிலுண்டாயிருந்த கலக்கங்களை யெல்லாம் நீக்கிச் சந்தோஷப்படுத்தினார். மகதலேனாள் மரியாளுக்கு முதல் தரிசனம் கொடுத்தபோது, 'நீ என்னைத் தொடாதே நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை' யென்றார். போகிற இடம் பிதாவினிடம் என்று திட்டமாய்த் தெரிகிறது. கிறிஸ்துவுடனே கூட இருந்த சீஷர்களும், பத்தொன்பது நூற்றாண்டுகளாய்த் திருச்சபையும், பக்தர்களும், இயேசுகிறிஸ்து கன்னிமரியாளிடத்தில் பரிசுத்த ஆவியினாலே உற்பவித்துப் பிறந்தாரென்றும், பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தாரென்றும், பரலோகத்துக்கு ஏறி பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தாரென்றும் விசுவாசித்து வந்திருக்கிறார்கள். ஒரு மனுஷனுக்குத் தான் உண்டுபண்ணின ஓர் இரதம், மரக்கலம், ஆகாயக்கப்பல் ஆகிய இவைகள் அவன் பிரயாணம் செய்வதற்குப் பிரயோசனப்படுகிறதுபோல், சர்வ தத்துவங்களுக்கும் அதிகாரியாகிய கிறிஸ்து வள்ளல் தம் சிருஷ்டி கிரியையாகிய மேகத்தை வாகனமாகக் கொண்டு பிதாவினிடம் சென்றார். மனுச்சாதியை மீட்கும்படி ஏழைக்கோலமாய் மனுஷாவதாரம் செய்

தார். சாத்தானையும், உலகத்தையும், பாவத்தையும் வென்று வெற்றி சிறந்தபோது சர்வ வல்லமையுள்ள கர்த்தராய் சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் தம்மிருப்பிடமாகிய வானலோகத்துக்கு மகிமையாய் உயர்ந்து சென்றார். வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி என்றார். இப்பொழுது அவருக்கு வானத்திலும் பூமியிலும் ஒன்றும் மறைவானதில்லை, சர்வ சிருஷ்டிகளும் அவைகளின் சம்பவங்களும் தமக்கு முன்பாகப் பிரத்தியட்சமாயிருக்கின்றனவென்பதுதான். தம்முடைய சீஷர்களுக்குப் படித்துக்கொடுத்த ஜெபத்தில், பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று ஜெபிக்கவேண்டுமென்றார். அவரிருக்கும் ஸ்தலம், எந்த மனிதனுக்கும், எந்த சாஸ்திரிக்கும், ஞானிக்கும், கல்விமானுக்கும் வெளிப்படாத கடவுளுக்குத் தெரிந்த இடம். அந்த இடத்தில் சிங்காசனங்களுண்டு, வாசஸ்தலங்களுண்டு, கோடானுகோடி தூதர்களுண்டு, கடவுளை இடைவிடாமல் போற்றித் துதிபாடி வணங்குகிற நான்கு ஜீவன்களுண்டு, கேருபீன்களுண்டு, சேராபின்களுண்டு, இருபத்திநான்கு மூப்பருண்டு என்று தியானிக்கும்போது எவ்வளவு ஆனந்த பரவசமாயிருக்கிறதென்று விசுவாசி காண்கிறான். சீஷர்களெல்லாரும் இத்த உலகத்திலேயே அந்த வெளிப்படுத்தலை அறிந்தவர்களாய் போதித்தார்கள்.

மூன்றாவது. வேலை. கிறிஸ்து பாமேறினதின் நோக்கம், பரிசுத்த ஆவியானவரை அனுப்பவும், பிதாவினிடத்தில் மனுக்குலத்துக்காகப் பரிந்துபேசவும், சதாகாலமும் தம்முடைய பிள்ளைகளோடு இருக்கவுமே. அவர் எப்பொழுதும் இடைவிடாமல் நமக்காக வேலைசெய்துகொண்டேயிருக்கிறார். ஆகையால் சீஷர்களைப் பார்த்து வேலைசெய்யும்படி சொன்னார். நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைக் கூறி அறிவியுங்கள். நான் போதித்த கட்டளைகளெல்லாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்களென்றார். நம்மை ஏராளமான புறமதஸ்தர் மத்தியில் பற்பல இடங்களில் வைத்து அவர்களுக்குச் சாட்சிகளாயிருக்கும்படி சொல்லுகிறார். நாம் வானத்தில் அவர் இரண்டாந்தரம் வரும்போது அவரோடு மேகங்கள்மேல் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு தகுந்த விசுவாசத்தோடு ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் சுவிசேஷவேலை செய்யவேண்டும். மற்றப்படி நாம் திக்கற்றவர்களாய் விடப்படுவோம். தேவ ஊழியம்தான் மனுஷரை மேன்மைப்படுத்தும், அலங்காரப்படுத்தும், உயர்தலங்களில் நிறுத்தும், பிரபுக்களோடும் அதிகாரிகளோடும் உட்காரவைக்கும். இதன்பின் தேவகுமாரனாகிய கிறிஸ்துவுடனே சிங்காசனத்தில்

ஏற்றிவைக்கும். நாமெல்லாரும் ஏகோபித்துக் கிறிஸ்துவின் இரட்சணியம் எல்லாருக்கும் கிடைக்கும்படியாக உழைப்போமாக. அப்பொழுதும் அவர் என்றென்றைக்குமுள்ள நித்திய சந்தோஷத்தை நமக்குத் தருவார்.

மனமயங்காதே யென் மானே மனமயங்காதே
நான் வான்போய் வருவேன் தியங்காதே
கனமே யெருசலேயில் வாழ் அன்னமே
கண்ணே கலங்காதே யென் மானே.

V. D. K.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-ஆம் ஆகஸ்டுமீ

1 வெ.	அப்.	27.	1—17	11 தி.	மாற்.	3.	1—19	21 வி.	மாற்.	6.	30—44
2 ச.	,,	27.	18—29	12 செ.	,,	3.	20—35	22 வெ.	,,	6.	45—56
3 ஞா.	,,	27.	30—44	13 பு.	,,	4.	1—12	23 ச.	,,	7.	1—23
4 தி.	,,	28.	1—16	14 வி.	,,	4.	13—29	24 ஞா.	,,	7.	24—37
5 செ.	,,	28.	17—31	15 வெ.	,,	4.	30—41	25 தி.	,,	8.	1—13
6 பு.	மாற்.	1.	1—13	16 ச.	,,	5.	1—20	26 செ.	,,	8.	14—26
7 வி.	,,	1.	14—28	17 ஞா.	,,	5.	21—34	27 பு.	,,	8.	27—38
8 வெ.	,,	1.	29—45	18 தி.	,,	5.	35—43	28 வி.	,,	9.	1—13
9 ச.	,,	2.	1—12	19 செ.	,,	6.	1—13	29 வெ.	,,	9.	14—32
10 ஞா.	,,	2.	13—28	20 பு.	,,	6.	14—29	30 ச.	,,	9.	33—50
								31 ஞா.	,,	10.	13—27

C. L. S. PRESS, MADRAS—1919